தினமணி

# விரயமாகும் வேளாண் மானியங்கள்

First Published : 25 May 2010 12:00:00 AM IST



கடலூர், மே 24: வேளாண் பொறியியல் கருவிகளுக்கு அரசு வழங்கும் மானியங்கள் முழுமையாக விவசாயிகளைச் சென்றடையவில்லை என்ற கருத்து, விவசாயிகளிடம் அண்மைக் காலமாக மேலோங்கி வருகிறது.

துணிக் கடைகளில் ஆண்டுதோறும் ஆடித் தள்ளுபடி விற்பனை, அதிகப்படியான விளம்பரங்களுடன் அமோகமாக நடந்து கொண்டு இருக்கிறது. 50 சதவீதம் தள்ளுபடி என்றால் 40 சதவீதத்துக்கு மேல் விலையை உயர்த்தி தள்ளுபடி என்ற பெயரில் விற்பனை செய்கிறார்கள்.

விலையை உயர்த்தி தள்ளுபடி என்ற பெயரில் விற்கும் வியாபார யுத்தி, வேளாண் பொறியியல் துறையிலும் நுழைந்து இருப்பதாக விவசாயிகள் வேதனை தெரிவிக்கிறார்கள். தமிழகத்தில் சுமார் ரூ.3,700 கோடி விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

மாவட்டத்துக்கு 600 தார்பாலின்கள் வரை விவசாயிகளுக்குத் தேவைப்படுகிறது. இதன் சந்தை விலை 2005-ல் ரூ.3,800. அரசு மானியம் ரூ.1,800 போக விவசாயிகளுக்கு ரூ. 2,000-க்கு வழங்கப்பட்டது. தற்போது இதன் விலை ரூ.6,500 என அரசு நிர்யணயம் செய்து, மானியம் ரூ.2,200 போக ரூ.4,100க்கு வழங்குகிறார்கள். வெளிச் சந்தையில் தரமான தார்பாலின் விலை ரூ.4,200தான்.

விவசாயிகள் அதிகம் பயன்படுத்தும் பவர் டில்லர் விலை 2006-ல் ரூ.1.16 லட்சம். மானியம் ரூ.27 ஆயிரம். தற்போது மானியத்தை ரூ.45 ஆயிரமாக உயர்த்தி, விலையை ரூ. 1.33 லட்சமாக அரசு நிர்ணயித்து உள்ளது. கைத் தெளிப்பான் விலை 2006-ல் ரூ.1,150. மானியம் போக ரூ.850-க்கு வழங்கப்பட்டது. தற்போது மானியத்தை ரூ.800 ஆக உயர்த்தி, விலையை ரூ.1,850 ஆக அதிகரித்து உள்ளது. விவசாயிகளுக்கு ரூ.1,050-க்கு வழங்கப்படுகிறது. வெளிச்சந்தையில் தரமான கைத் தெளிப்பான் விலை ரூ.1,350

மினி டிராக்டர் விலை 2006-ல் ரூ.2.38 லட்சமாக நிர்ணியக்கப்பட்டு 50 சதவீதம் மானியம் வழங்கப்பட்டது. தற்போது விலை ரூ.2.70 லட்சமாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. பவர் வீடர் கருவி 2006ல் ரூ.45 ஆயிரம் என விலை நிர்ணயம் செய்யப்பட்டு, ரூ.15 ஆயிரம் மானியம் வழங்கப்பட்டது. தற்போது மானியத்தை ரூ.20 ஆயிரமாக உயர்த்தி, விலையை ரூ. 60 ஆயிரமாக உயர்த்தி நிர்ணயித்து இருக்கிறது அரசு.

ரோட்டோ வேட்டர் உழவுக்கருவி 2005-ல் ரூ.60 ஆயிரமாக நிர்ணயித்து, மானியம் ரூ.20 ஆயிரம் வழங்கினர். இப்போதும் அதே மானியம்தான். ஆனால் விலையை ரூ.80 ஆயிராக உயர்த்தி நிர்ணயம் செய்து உள்ளது வேளாண் துறை.

கதிர் அடிக்கும் இயந்திரம் டயர் மாடல் விலை ரூ.16 லட்சம். பெல்ட் மாடல் ரூ.22 லட்சம். இரண்டுக்கும் மானியம் ரூ.4 லட்சம். (மானியம் போக முறையே ரூ.12 லட்சத்துக்கும், ரூ.18 லட்சத்துக்கும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது) சுமார் 7 நிறுவனங்களின் தயாரிப்புகளுக்கு இதே விலைதான்.

ஆனால் இந்தியாவில் முன்னணி நிறுவனம் ஒன்று தனது தயாரிப்பு கதிர் அடிக்கும் இயந்திரத்தை லாபம், விற்பனையாளர் கமிஷன் சேர்த்து, டயர் மாடல் ரூ.13 லட்சத்துக்கும், பெல்ட் மாடல் ரூ.18 லட்சத்துக்கும் அரசு மானியம் இன்றி நேரடியாக விவசாயிகளுக்கு விற்பனை செய்து உள்ளது. ஜனவரியில் 40 இயந்திரங்களையும், பிப்ரவரியில் 19 இயந்திரங்களையும் அந்த நிறுவனம் விற்பனை செய்து இருப்பதாக நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் மானிய விலையில் வேளாண் கருவிகளுக்காக 2007-ல் விண்ணப்பித்தவர்கள் இன்னமும் காத்து இருக்கிறார்கள். மானியம் பெறுவதற்காக ஒரு விவசாயி, சிட்டா, அடங்கல் உள்ளிட்ட ஆவணங்களை பெற்றுத்தர ரூ.500 வரை செலவு செய்ய வேண்டியது இருக்கிறது.

பவர் டில்லர், மினி டிராக்டர் போன்றவற்றை விற்பனை செய்யும் நிறுவனங்கள், குறிப்பாக சீன தயாரிப்புகளின் டீலர்கள் சிலர், விவசாயிகளை அணுகி மானியம் பெறுவதற்கான அனைத்து ஆவணங்களையும் சேகரித்து, வேளாண் துறையில் சமர்ப்பித்து விடுகின்றனராம்.

இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் விவசாயிகளுக்கு உடனே கருவிகளை வழங்கி விடுகின்றனராம். ஆனால் நேரடியாக விண்ணப்பிக்கும் விவசாயிகள் கருவிகள் கிடைக்க ஆண்டுக் கணக்கில் காத்துக் கிடக்கும் நிலை ஏற்படுகிறதாம்.

இது குறித்து பாசிமுத்தான் ஓடை விவசாயிகள் சங்கத் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், வேளாண் கருவிகளின் தரத்தை ஆய்வு செய்து விலை நிர்ணயம் செய்து, விற்பனைவரி, உற்பத்தி வரி நீங்கலாக விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்க வேண்டும்.

சிதம்பரம் கோட்டத்தில் 2007-ல் வேளாண் கருவிகளுக்காக 300 பேர் விண்ணப்பித்தனர். இதுவரை 25 பேருக்குத்தான் வழங்கப்பட்டு உள்ளது.

ஆண்டுதோறும் புதிதாக விண்ணப்பிக்கும் நிலை உள்ளது என்றார்.

இது குறித்து வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் அரியபூபதியிடம் கேட்டதற்கு, "வேளாண் கருவிகள் விலையை அரசுதான் நிர்ணயிக்கிறது.

கடலூர் மாவட்டத்தில் பவர் டில்லர் கேட்டு 700 விண்ணப்பங்களும், மினி டிராக்டர் கேட்டு 100 விண்ணப்பங்களும் வந்துள்ளன.

ஜூன் மாதத்தில் நிதி ஒதுக்கீடு வந்ததும், விண்ணப்பம் அளித்தவர்களில் முதலில் யார் வங்கி வரைவோலை அளிக்கிறார்களோ, அவர்களுக்கு மானிய விலையில் கருவிகள் வழங்கப்படும். தேவையில் 10 சதவீதம் பேருக்குத்தான் மானிய விலையில் கருவிகள் வழங்கப்படுகிறது' என்றார்.

**லைலா புயல் எதிரொலி: முருங்கை மகசூல் பாதிப்பு**

First Published : 25 May 2010 12:00:00 AM IST



தோட்டத்தில் அறுவடை செய்து வைத்துள்ள முருங்கைக்காய் (கோப்பு படம்).

பண்ருட்டி,மே 22: அண்மையில் மழையுடன் பலத்த காற்று வீசியதால் முருங்கை மரத்தில் இருந்த பூக்களும், பிஞ்சுகளும் உதிர்ந்து விட்டன. இதனால் முருங்கை மகசூல் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

÷பண்ருட்டி வட்ட பகுதியில் உள்ள மாளிகைமேடு, திராசு, தட்டாம்பாளையம், கட்டமுத்துப்பாளையம் உள்ளிட்ட பல் வேறு கிராம பகுதியில் 100-ம் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் முருங்கை பயிரிடப்பட்டுள்ளது.

÷அண்மையில் வங்கக் கடலில் மையம் கொண்டிருந்த லைலா புயல் காரணமாக தமிழகத்தின் கடலோர மாவட்டத்தில் கனமழை பெய்ததுடன், பலத்த காற்று வீசியது. ÷பண்ருட்டி வட்ட பகுதியில் மழை மற்றும் பலத்த காற்று வீசியதால் முருங்கை மரத்தில் இருந்த பூக்களும், பிஞ்சுகளும் உதிர்ந்து முருங்கை மரங்கள் சேதம் அடைந்ததால் மகசூல் பாதிக்கப் பட்டுள்ளது.

÷முருங்கை விவசாயி திராசு ராஜசேகர் கூறியது: ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து முருங்கை பயிரிட்டிருந் தேன். மரத்தில் பூக்களும் பிஞ்சும் பிடித்திருந்த சமயத்தில் திடீர் என காற்று மழை வந்ததால் மரத்தில் இருந்த பூ மற்றும் பிஞ்சுகள் உதிர்ந்துவிட்டது. இதனால் மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

÷செய்த செலவைக் கூட ஈடுகட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சேதமடைந்த முருங்கைத் தோட்டங்களை கணக் கிட்டு அரசு நிவாரணம் வழங்க முன்வர வேண்டும் என முருங்கை விவசாயி ராஜசேகர் வேதனையுடன் கூறினார்.

÷வியாபாரி எஸ்.வி.டி.ஜெயசங்கர் கூறியது: பண்ருட்டி வட்ட பகுதியில் 100-ம் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் முருங்கை விவசாயம் நடைபெறுகிறது.

÷இங்கு பயிரிடப்படும் முருங்கை சென்னை, வேலூர், பெங்களூர், ஆரணி, தருமபுரி உள்ளிட்ட பல பகுதிகளுக்கு விற்ப னைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

÷அறுவடை நடைபெற சில நாட்களே உள்ள நிலையில் திடீர் என பெய்த மழையாலும், பலத்த காற்றாலும் முருங்கைத் தோட்டங்கள் கடுமையாக சேதம் அடைந்து உள்ளதால் உற்பத்தி குறையும் என கூறினார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 74.73 அடி**

First Published : 25 May 2010 05:40:32 AM IST

சேலம், மே 24: மேட்டூர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 74.73 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 3,687 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 1,222 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணை நீர் இருப்பு 36.90 டி.எம்.சி.

**முட்டை விலை உயர்வு**

First Published : 25 May 2010 02:50:27 AM IST

வேலூர், மே 24: வேலூரில் முட்டை விலை ரூ.3 ஆக உயர்ந்துள்ளது.

நாமக்கல் பண்ணையில் ஒரு முட்டையின் விலை ரூ.2.80-க்கு விற்பனை செய்யப்படுவதால், சில்லரை விற்பனையில் முட்டை ஒன்றின் விலை ரூ.2.90-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வேலூர் மாவட்டத்தில் கடந்த வாரம் ஒரு முட்டையின் விலை ரூ.2.75 ஆக இருந்தது. தற்போது ஒரு முட்டையின் விலை ரூ.2.90 முதல் அதிகபட்சமாக ரூ.3 வரை விற்பனை செய்யப்படுகிறது.

இதுகுறித்து வேலூர் காந்தி வீதியில் உள்ள சில்லரை வியாபாரி மு.அழகானந்தம் கூறுகையில், "ஏற்றுமதியால் முட்டைக்கும் தட்டுப்பாடு ஏற்படுட்டுள்ளது. அதனால் உள்ளூர் விற்பனை விலை உயர்ந்துள்ளது' என்றார் அவர்.

**கோட்டா முறை அறிமுகத்தால் தேயிலை விவசாயிகளுக்கு பாதிப்பு**

First Published : 25 May 2010 05:34:40 AM IST

கூடலூர்,மே 24: கூடலூர், பந்தலூர் பகுதிகளில் உள்ள கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் கோட்டா முறை அறிமுகப்படுத்தியுள்ளதால், சிறு தேயிலை விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

காலநிலை தேயிலைப் பயிருக்கு சாதகமாக உள்ளதால் பச்சைத் தேயிலையின் உற்பத்தி அதிகரித்துள்ளது. இதனால் சிறு விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ள வேலையில், கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் விவசாயிகளின் பச்சைத் தேயிலையை கொள்முதல் செய்வதில்லை.

÷மாறாக குறிப்பிட்ட அளவு மட்டுமே கொள்முதல் செய்வதற்காக கோட்டா முறையை அறிமுகம் செய்துள்ளது. குறைந்த அளவு பச்சைத் தேயிலையை மட்டும் தொழிற்சாலைக்கு வழங்கிவிட்டு, எஞ்சிய பச்சைத் தேயிலையை எடுத்து தோட்டத்திலேயே கொட்டி விடுகின்றனர்.

இதனால் சிறு விவசாயிகள் மிகுந்த மன வேதனைக்குள்ளாகியுள்ளனர். அது மட்டுமின்றி தொழிற்சாலைகள் தேவையில்லாத சில நிபந்தனைகளை விதிப்பதாகவும் விவசாயிகள் தரப்பில் கூறப்படுகிறது.

÷கூட்டுறவு தொழிற்சாலைகளை பின்பற்றி தனியார் தொழிற்சாலைகள் விலை நிர்ணயம் உட்பட அனைத்து செயல்களையும் செய்வதால் தனியார் தொழிற்சாலைகளும் தங்களுக்கு சாதகமாக சில கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டு, முறையாக பச்சை தேயிலையை கொள்முதல் செய்வதில்லை.

கடந்த மூன்று நாட்களாக இந்த பகுதியிலுள்ள தனியார் தேயிலைத் தொழிற்சாலைகள் பச்சைத் தேயிலையை வாங்க மறுத்ததால் யாருக்கும் பயனின்றி தோட்டத்திலேயே இலை பயனற்று கிடக்கிறது.

÷கடந்த சில மாதங்களாக வறட்சியின் காரணமாக பச்சைத் தேயிலையின் உற்பத்தி வெகுவாக குறைந்திருந்த காரணத்தால் சிறு விவசாயிகள் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்தனர்.

தற்போது குழந்தைகளை பள்ளி கல்லூரிகளில் சேர்க்கும் காலமானதாலும் போதிய அளவு உற்பத்தி இருந்தும் பச்சைத் தேயிலையை கொள்முதல் செய்யாத காரணத்தால் விவசாயிகள் தங்களது குழந்தைகளை உயர் கல்விக்கு அனுப்புவது கேள்விக் குறியாக உள்ளது.

÷ சிறு விவசாயிகளின் பச்சைத் தேயிலையை கொள்முதல் செய்ய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தினமலர்

**விளைச்சலை பெருக்க மண் பரிசோதனை வேளாண் இணை இயக்குனர் தகவல்**

விழுப்புரம் : பயிர் விளைச்சலை அதிகரிக்க மண் பரிசோதனை செய்வது மிகவும் அவசியம் என வேளாண்மை இணை இயக்குனர் ராமலிங்கம் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்தி குறிப்பு: விவசாய நிலங்களில் மண்ணிலுள்ள தழை, மணி, சாம்பல் சத்துகளின் அளவை அறிந்து அதற் கேற்ப உரமிட்டு உயர் விளைச்சல் பெறுவதற்கு, மண் பரிசோதனை மிகவும் அவசியமாக உள்ளது. மண் பரிசோதனைக்கு ஒரு ஏக்கர் நிலத்தில் குறைந்தது 10 இடங்களில் மண் எடுத்து அவற்றை ஒன்றாக கலந்து, அதிலிருந்து அரை கிலோ மண் மாதிரி எடுக்க வேண்டும்.எரு குவிந்த இடங்கள், வரப்பின் ஓரப் பகுதி, மர நிழல் மற்றும் நீர் கசிவு உள்ள இடங்களில் மண் மாதிரிகள் எடுக்கக் கூடாது. மண் மாதிரி எடுக்க வேண் டிய இடத் தில் இலை, சருகு, புல், செடிகளை மேல் மண்ணை நீக்காமல் கையால் எடுத்து அப்புறப்படுத்த வேண்டும்.மண் பரிசோதனை எடுக்கும் போது ஆங்கில எழுத்து "வி' வடிவில் குறிப் பிட்ட அளவு ஆழம் வெட்டி அதிலிருந்து மண் எடுக்க வேண்டும். குழியின் ஆழம் பயிருக்கு பயிர் மாறுபடும் என்பதால் நெல், கேழ்வரகு, கம்பு, வேர்கடலைக்கு மேலிருந்து 15 செ.மீ., ஆழத்திற் கும், பருத்தி, கரும்பு, மிளகாய், வாழை மற்றும் மரவள்ளி பயிர்களுக்கு 22.5 செ.மீ., ஆழமும், தென்னை, மா மற்றும் பழத்தோட்ட பயிர்களுக்கு முறையே 30 செ.மீ., 60 செ.மீ., மற்றும் 90 செ.மீ., ஆழத்திற்கு மண் மாதிரிகள் சேகரிக்க வேண்டும். களர், உவர், சுண்ணாம்பு தன்மை உள்ள நிலத்தில் ஒவ்வொரு அடிக்கும் ஒரு மண் மாதிரி வீதம் 3 அடி ஆழத்திற்கு 3 மாதிரிகளை எடுக்க வேண்டும். இவ்வாறு எடுத்த மண் சுத்தமான தரையில் அல்லது காகித விரிப்பில் உலர்த்தி தேவையான அளவு எடுத் துக் கொண்டு மீதி மண்ணை அப்புறப் படுத்த வேண்டும். இவ்வாறு எடுக்கப்படும் அரை கிலோ மண்ணை துணி பையில் இட்டு பெயர், முகவரி, சர்வே எண் ணுடன் அந்த நிலத்தில் பயிர் செய்யப் போகும் பயிர் ரகத்தையும் குறித்து விவசாயிகள் தங்களுக்கு அருகிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையங்கள் அல்லது உதவி மண் வேதியர், நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களில் 5 ரூபாய் கட்டணம் செலுத்தி பரிசோதனை செய்து கொள்ளலாம். இவ்வாறு வேளாண் இணை இயக்குனர் ராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

**சூறாவளியால் வாழைப்பயிர் பாதிப்பு : விவசாயிகளிடம் விபரம் சேகரிப்பு**

ஆலங்குடி: புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி பகுதியில் பலத்த காற்று மழையால் 300 ஏக்கரில் பயிரிடப்பட்டதை வாழை, மக்காச்சோளம் சாய்ந்து விட்டது. பாதிப்பு குறித்த விவரங்களை அந்தந்தப் பகுதி வி.ஏ.ஓ.,க்கள் விவசாயிகளிடம் விபரங்கள் சேகரித்து வருகின்றனர்.

ஆலங்குடி, வடகாடு, கீழாத்தூர், மாங்காடு, கொத்தமங்கலம், சூரன் விடுதி, புள்ளான் விடுதி, நெடுவாசல் இன்ன பிற பகுதிகளில் 300 ஏக்கரில் பயிரிட்டப்பட்டிருந்த மக்காச்சோளம் நவீன வேளாண் தொழில்நுட்பம் மூலம் ஏக்கருக்கு 40 முதல் 50 குவிண்டால் விளைச்சல் கிடைக்கிறது. வெளி மாநிலம், வெளி நாட்டிற்கும் விற்பனை செய்யப்படுகிறது. மக்கசோளம் குவிண்டால் ஒன்றுக்கு 850 ரூபாய் வரை விலை போகின்றது. குறைந்த முதலீட்டில் நல்ல விளைச்சல் ஏற்பட்டிருந்த மக்காசோளம் பயிர்கள் பலத்த காற்றால் அடியோடு ஒடிந்து சாய்ந்து விட்டது. இதேபோல, ரஸ்தாரி, பூவன், செவ்வாழை, கறிவாழை போன்ற பல ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த வாழை மரங்கள் அடியோடு சாய்ந்துவிட்டது. இதனால் வாழை, சோளம், பயிரிட்டிருந்த விவசாயிகள் பல லட்சம் ரூபாய் இழப்பீடு ஏற்பட்டு பல விவசாயிகள்

சோகத்தில் உள்ளனர். "பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசு போதிய நிவாரண உதவிகள் வழங்கப்பட வேண்டும்' என்பதே விவசாயிகளின் கோரிக்கை ஆகும்.

**துவரை செயல் விளக்க திடல் அமைக்க ரூ.5 ஆயிரம் மானியம்**

நாமக்கல்: "துவரை செயல் விளக்க திடல் அமைக்க ஹெக்டேர் ஒன்றுக்கு 5,000 ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படும்' என, வேளாண் உதவி இயக்குனர் பேபிகலா தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வட்டாரத்தில் பரவலாக மழை பெய்ததை தொடர்ந்து பயறுவகை சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. துவரை சாகுபடி செய்ய இது சரியான தருணம். தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் துவரை பயிரிடும் விவசாயிகளை ஊக்கப்படுத்துவதற்காக துவரை செயல்விளக்க திடல்கள் அமைக்கப்பட உள்ளது. நாமக்கல் வட்டாரத்தில் மொத்தம் 27 செயல்விளக்க திடல்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. செயல் விளக்க திடலுக்கு தேவையான விதை, உரம் போன்ற இடுபொருட்களுக்கு மான்யமாக ஹெக்டேர் ஒன்றுக்கு 5,000 ரூபாய் வழங்கப்படும். எனவே துவரை பயிரட ஆர்வமுள்ள விவசாயிகள் நாமக்கல் வட்டார வேளாண் விரிவாக்க அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஏலத்தோட்டங்களில் சாரல் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி : அதிக மகசூல் கிடைக்க வாய்ப்பு**

கம்பம் : ஏலத்தோட்டங்களில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து சாரல் மழை பெய்து வருகிறது. ஏல விவசாயத்திற்கு உகந்ததாக இந்த மழை இருப்பதால் வரும் சீசனில் நல்ல மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி யடைந்துள்ளனர்.

இடுக்கி மாவட்டத்தில் 1.5 லட்சம் ஏக்கரில் ஏலக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. தோட்டங்கள் தேனி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிடம் 90 சதவீத தோட்டங்கள் உள்ளன. பெரும்பாலும் தோட்டதொழிலாளர்களும் இங்கிருந்து தான் செல்கின்றனர். பொதுவாக கடந்த பல ஆண்டுகளாக ஏல விவசாயிகள் நல்ல விலை கிடைக்காமலும், மகசூல் திருப்தி தராத நிலையிலும் இருந்தனர்.

ஆனால் இந்த சீசனில் கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக யாருமே எதிர்பாராத விதத்தில் விலை அதிகரித்தது. அதிகபட்சமாக கிலோவிற்கு 1600 ரூபாய் வரை கிடைத்துள்ளது. ஏலக்காய் சாகுபடி வரலாற்றில் இது மாதிரி விலை கிடைத்ததில்லை. இந்த விலை குறைந்து விடும் என்று எதிர்பார்த்தனர்.

ஆனால் விலை ஏறுமுகமாக உள்ளதே தவிர, இறங்குவதாக தெரியவில்லை. இந்நிலையில் தற்போது வண்டன்மேடு, புளியன்மலை, மாலி,மாதவன்கானல், சங்குருண்டான், புத்தடி உள்ளிட்ட பல பகுதிகளில் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக நல்ல சாரல் மழை பெய்து வருகிறது. காய் பிடிக்கும் தருணத்தில் இந்த மழை பெய்வதால் நல்ல மகசூல் கிடைக்க வாய்ப்புள் ளது.

அதே சமயம் குவாதிமாலா நாட்டில் ஏலக்காய் சாகுபடி முழுவதும் கிடையாது. எனவே சர்வதேச தேவையை பூர்த்தி செய்ய வேண்டிய இடத்தில் இந்தியா மட்டுமே உள்ளது. எனவே ஏறிய விலை இறங்க வாய்ப்பில்லை. மேலும் விலை அதிகரிக்கும். மகசூலும் கிடைத்து, விலையும் கிடைத்து வருவதால், ஏலக்காய் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மழை பெய்வதை ஒட்டி ஏலத் தோட்டங்களில் கவாத்து எடுத்தல், களை எடுத்தல், உரம் வைத்தல், பூச்சி மருந்து தெளித்தல் போன்ற பணிகள் விறுவிறுப்படைந்துள்ளன.

**முதல்போக சாகுபடிக்கு பெரியாறு, வைகை அணைகள் திறப்பு: விவசாயிகள் எதிர்பார்ப்பு**

ஆண்டிபட்டி : முதல் போக சாகுபடிக்கு பெரியாறு, வைகை அணை திறக்கப்படுமா என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர்.

வைகை அணை நீர் பிடிப்பு பகுதியான வருஷநாடு மலைப்பகுதியில் சென்ற ஆண்டு போதிய மழை இல்லாததால் வைகை அணைக்கான நீர் வரத்தும் அதிக அளவில் இல்லை. இதனால் இரண்டாம் போக சாகுபடிக்கே சிரமம் ஏற்பட்டது. முறைப்பாசனம் நடைமுறைப்படுத்தப்பட்டது. கோடை துவங்கியதும் வைகை அணை நீர் மட்டம் 30 அடிக்கும் கீழே குறைந்து விட்டது. இந்நிலையில் குடிநீருக்கே சிக்கல் ஏற்படும் நிலை உருவானது. திடீரென பெய்த கோடை மழையால் நீர் தேவைகள் ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டது.

இருப்பினும் இந்த ஆண்டு மதுரை சித்திரை திருவிழாவுக்கு அணை திறக்கப்படவில்லை. நேற்று வைகை அணை நீர் மட்டம் 30.97 அடியாக இருந்தது.(மொத்த உயரம் 71 அடி). அணைக்கான நீர் வரத்து ஏதும் இல்லை. அணையில் இருந்து மதுரை, சேடபட்டி-ஆண்டிபட்டி குடிநீருக்காக 41 கன அடி திறந்து விடப்பட்டுள்ளது. பேரணை முதல் கள்ளந்திரி வரை உள்ள 48 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்களுக்கு முதல் போக சாகுபடிக்கு ஜூனில் நீர் திறக்கப்படுமா என்ற எதிர்பார்பில் விவசாயிகள் உள்ளனர். காரணம் பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதிகளில் மழை இன்னும் துவங்கவில்லை. பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்ந்தால் தான் அங்கிருந்து நீர் திறக்கப்பட்டு வைகை அணைக்கு வரும். வைகை அணையின் நீர்மட்டம் உயர்ந்தால் தான் கள்ளந்திரி பாசனத்திற்கு திறக்கப்படும்.

பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், தற்போது பெரியாறு அணை நீர் மட்டம் 110.20 அடியாக உள்ளது. தற்போது பருவ மழைக்கான அறிகுறிகள் துவங்கி உள்ளன. பெரியாறு அணை நீர் மட்டம் 112 அடியாகும் போது கம்பம் பள்ளத்தாக்கு பகுதிக்கும், 120 அடியாக உயரும்போது முதல் போக சாகுபடிக்கும் அணை நீர் திறந்து விடப்படும். இந்த நீர் வைகை அணை வந்து சேர்ந்தவுடன் இங்கிருந்து பேரணை, கள்ளந்திரி பகுதிகளுக்கு திறக்கப்படும். தற்போதைய சூழ்நிலையில் முதல் போக சாகுபடிக்கு ஜூன் இறுதிக்குள் திறக்க வாய்ப்புள்ளது என்றனர்.

**பசுந்தேயிலைக்கான முன்பணம் இல்லை: பராமரிப்பு தொகைக்கு அல்லாடும் மக்கள்**

மஞ்சூர் : இத்தலார் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் பசுந்தேயிலைக்கான முன்பணம் மற்றும் "செட்டில்மென்ட்' தொகை வழங்கப்படாததால் உறுப்பினர்கள் அவதியடைந்து வருகின்றனர். மஞ்சூர் அருகே இத்தலார் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் இத்தலார், பெம்பட்டி, போர்த்தி, பேலிதளா, புதுஹட்டி, நஞ்சநாடு உள்ளிட்ட கிராமங்களில் உள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அங்கத்தினர்களாக உள்ளனர். தங்கள் தோட்டத்தில் பறிக்கும் பசுந்தேயிலையை இத்தலார் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைக்கு வினியோகித்து வருகின்றனர். இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்து ஏலத்திற்கு எடுத்து செல்லப்பட்ட தேயிலை தூள் விற்பனையாகாமல் குன்னூர் தேயிலை ஏல மையத்தில் தேக்கமடைந்துள்ளது. இதனால், பணம் பரிவர்த்தனை அடியோடு முடங்கியுள்ளதாக தொழிற்சாலை தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கடந்த மார்ச் மாதத்தில் அங்கத்தினர்கள் வினியோகித்த பசுந்தேயிலைக்கு இதுவரை "செட்டில்மென்ட்' தொகையும், தினமும் வினியோகிக்கும் பசுந்தேயிலைக்கான முன்பணம் வழங்க முடியவில்லை. தேயிலை தோட்டத்திற்கு வேலைக்கு வந்த கூலி ஆட்களுக்கு பணம் கொடுக்கவும், தேயிலை தோட்டத்தை பராமரிக்கவும் முடியாமல் அங்கத்தினர்கள் திணறுகின்றனர்.விரைவில் தொழிற்சாலைக்கு பசுந்தேயிலை வினியோகிப்பதை நிறுத்தவும் இவர்கள் முடிவெடுத்துள்ளனர். தொழிற்சாலை நிர்வாகம் தொழிற்சாலையின் உற்பத்தி குறித்து எவ்வித நடவடிக்கை எடுக்காததே பின் தங்கிய நிலைக்கு முக்கிய காரணம் என்பதே குற்றச்சாட்டாக உள்ளது. இத்தலார்

கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையின் நிலை படுமோசமான நிலைக்கு தள்ளப்படும் முன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும்.

**ஒரு கிலோ தக்காளி ரூ.80**

திண்டுக்கல் : கடந்த மூன்று நாட் களாக திண்டுக்கல்லிற்கு தக்காளி வரத்து குறைந் துள்ளது. ஒரு வாரத்தில், விலை நான்கு மடங்கு அதிகரித் துள்ளது. கடந்த வாரம் 15 கிலோ கொண்ட ஒரு தக்காளி பெட்டி, 150 ரூபாய் முதல் 220 ரூபாய் வரை விற்றது.நேற்று ஒரு பெட்டி தக்காளி 850 ரூபாயாக உயர்ந்திருந்தது. முன் னதாக 30 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ நாட்டுத் தக்காளி, நேற்று காந்தி மார்க்கெட்டில் 80 ரூபாய்க்கு விற்பனையானது. பிற காய்கறிகளும் இரண்டு முதல் மூன்று மடங்கு விலை அதிகரித்திருந்தன.கத்தரி 20,அவரைக்காய் 60,கேரட் 40, பீட்ரூட் 40,முள்ளங்கி 20, உருளைக்கிழங்கு 16, வெங்காயம் 18, பெல்லாரி 14, பச்சை மிளகாய் 60, முருங்கைக்காய் 20,கோஸ் 16,பீன்ஸ் 40, பட்டர் பீன்ஸ் 80, சோயா பீன்ஸ் 70 ஆகிய விலைகளில் விற்றது.

**விவசாய ஸ்டோர்ஸ் திறப்பு**

திண்டுக்கல் : திண்டுக்கல்லில் வெங் கட சுப்ரமணிய விவசாய ஸ்டோர்ஸ் பொன் விழா, புதிய கட்டட திறப்பு விழா நடந்தது.

முன்னாள் வேளாண் உதவி இயக்குனர் பழனிச் சாமி தலைமை வகித்தார். மான் சான்டோ விதை மைய இயக்குனர் ராஜ்மோகன், ஸ்ரீதர் அக் ரோ மார்க்கெட்டிங் நிர் வாக இயக்குனர் இளங் கோ, கோரமண்டல் இன்டர் நேஷனல் நிர்வாகி காமராஜ் முன்னிலை வகித்தனர். புதிய கட்டடத்தை வேளாண் இணை இயக்குனர் தெய்வேந்திரன், விபா சீட்ஸ் குரூப் தலைமை பொது மேலாளர் வேல்முருகன், தரக்கட்டுப்பாடு உதவி இயக்குனர் மனோகரன் திறந்து வைத்தனர்.

கோரமண்டல் மேலா ளர் செல்வக்குமரன், விவசாய ஸ்டோர்ஸ் உரிமையாளர் குப்புச்சாமி, வாணி பிரியா டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் சண்முகம், மதுரா ஸ்டீல் உரிமையாளர்கள் ராமலிங்கம், நடராஜ், பண்டரிநாதன், ரோட்டரி சங்க முன்னாள் தலைவர் அர்ஜூன் உட்பட பலர் பங்கேற்றனர். விழா ஏற்பாடுகளை நிறுவன மேலாளர் சரவணன் செய்திருந்தார்.

**நிலக்கடலைக்கு தேவை ஜிப்சம்**

தென்காசி:நிலக்கடலை பயிருக்கு ஜிப்சம் இட வேண்டும் என செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் விவசாயிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: செங்கோட்டை வட்டாரம் அகரக்கட்டு, புளியரை, புதூர் கிராமங்களில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நிலங்களில் சாகுபடி செய்துள்ள நிலக்கடலை பயிருக்கு பூக்கும் சமயத்தில் ஜிப்சம் இட வேண்டும். ஏக்கருக்கு 80 கிலோ வீதம் செடியை சுற்றி ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும். இதனால் மண் இலகுவாகி பூக்கள் திரட்சியான காய்களாக மாறும்விதைத்த 45ம் நாள் நிலக்கடலை பயிருக்கு ஜிப்சம் இட்டு விவசாயிகள் பயன்பெற வேண்டும் என விவசாயிகளை வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**பூத்து குலுங்கும் கேந்தி பூக்கள்விலையேற்றத்தால் விவசாயிகள் "குஷி"**

தென்காசி:கேந்தி பூக்களின் விலை அதிகரிப்பால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தென்காசி, கீழப்பாவூர், பாவூர்சத்திரம், ஆவுடையானூர், மேலமெஞ்ஞானபுரம், வேட்டைக்காரன்குளம், ராமச்சந்திரபட்டணம், மடத்தூர், மத்தளம்பாறை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் பரவலாக கேந்தி பூக்கள் பயிரிடப்பட்டுள்ளன. வழக்கமாக கேந்தி பூ கிலோவிற்கு 10 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை விற்பனையாகும்.தற்போது கோடை காலம் என்பதாலும், தண்ணீர் பற்றாக்குறை உள்ளதாலும் கேந்தி பூக்களின் விளைச்சல் குறைந்துள்ளது. மேலும் இப்போது முகூர்த்த நாட்கள் அதிகமாக இருப்பதால் கேந்தி பூக்களின் விலை அதிகரித்துள்ளது. கிலோ கேந்தி பூ 140 ரூபாய் முதல் 180 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. மல்லி, பிச்சி பூ விலைக்கு ஈடாக கேந்தி பூ விலை உயர்ந்துள்ளதால் கேந்தி பூ சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**மழை நீர் சேகரிப்பை ஊக்குவிக்க விருதுகள்: ஜூன் 15ம் தேதிக்குள் விண்ணப்பிக்க அழைப்பு**

திருநெல்வேலி:மழை நீர் சேகரிப்பை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப்படும் விருதுகளை பெற வரும் ஜூன் மாதம் 15ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்.நில நீர் சேமிப்பை ஊக்குவிப்பதற்கு மத்திய நீர் வளத் துறை நில நீர் செறிவூட்டும் விருது மற்றும் தேசிய நீர் வள விருது ஆகியவற்றை வழங்க முடிவு செய்துள்ளதுநெல்லை மாவட்டத்தில் மழை நீர் சேகரிபபு மற்றும் செயற்கை முறையில் நில நீரை சிறப்பாக சேகரிக்கும் நிறுவனங்களிடமிருந்து கிராமப்புற மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்தும் உரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அரசு சாரா நிறுவனங்கள், கிராம பஞ்.,கள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், விவசாய மேம்பாட்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், தனி நபர்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.இதுதொடர்பாக தகுதியான தனி நபர்கள்/நிறுவனங்கள்/கிராமப்புற மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள் தகுந்த ஆதாரத்துடன் வீடியோ படங்கள், போட்டோக்கள் மற்றும் பவர் பாயின்ட் கம்ப்யூட்டர் பதிவு படங்களுடன் "மாவட்ட கலெக்டர் அலுவலகம் (வளர்ச்சி பிரிவு), நெல்லை - 9' என்ற முகவரிக்கு வரும் ஜூன் மாதம் 15ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

**ரூ.3 கோடியில் செயற்கை முறை நிலத்தடி நீர் செறிவூட்டல் நிறைவு**

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 3 கோடி ரூபாய் செலவில் செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் பணிகள் நிறைவடைந்துள்ளது' என கலெக்டர் சண்முகம் தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்தவும், கால்நடைகளுக்கு குடிநீர் கிடைத்திடவும் தமிழக அரசின் சார்பில் செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம் கடந்த 2008ம் ஆண்டு துவங்கப்பட்ட வேளாண் பொறியியல் துறை சார்பில் அனைத்து பஞ்சாயத்துகளிலும் நடந்து வருகிறது. நடப்பாண்டில் கிருஷ்ணகிரி, வேப்பனப்பள்ளி, காவேரிப்பட்டணம், மத்தூர், ஊத்தங்கரை, பர்கூர், சூளகிரி, ஓசூர் ஆகிய ஒன்றியங்களில் 11 நடுத்தர தடுப்பணைகள் 8 லட்ச ரூபாய் மதிப்பிலும் 12 பெரிய தடுப்பணைகள் 13 லட்ச ரூபாய் மதிப்பிலும், நீர் செறிவூட்டும் முறையுடன் கூடிய 11 கசிவு நீர் குட்டைகள் 38 லட்ச ரூபாய் மதிப்பிலும் 5 பண்ணை குட்டைகள் 2 லட்ச ரூபாய் மதிப்பிலும் 15 கிராம குட்டைகள் 22 லட்ச ரூபாய் மதிப்பிலும் மொத்தம் 54 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இந்த பணிகளை கலெக்டர் சண்முகம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மழைகாலங்களில் கரைகளில் உள்ள மண் அரிப்பு ஏற்பட்டு கீழே செல்லாமல் இருக்க உரிய தடுப்பு பணிகளை செய்திடவும், நீர்பிடிப்பு பகுதிகளில் மரக்கன்றுகள் அதிக அளவில் நட்டு பராமரிக்கவும் அலுவலர்களுக்கு அறிவுறை வழங்கினார். மேலும் "கடந்த இரு ஆண்டுகளில் 3 கோடி ரூபாய் மதிப்பில் செய்து முடிக்கப்பட்டுள்ள நிலத்தடி நீர் செறிவூட்டம் பணிகளை விவசாயிகள் பராமரிக்க

வேண்டும்' என கலெக்டர் கேட்டுக்கொண்டார். வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் அருள்மொழி, உதவி செயற்பொறியாளர் நடராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 27ம் தேதி கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது. கலெக்டர் சண்முகம் தலைமை வகிக்கிறார். கூட்டத்தில் அனைத்துதுறை மாவட்ட உயர் அதிகாரிகளும் கலந்து கொள்கின்றனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவித்து பயன் பெறலாம்.

**கொப்பரை விவசாயிகள் கனவு நனவாகிறது**

பொங்கலூர் : பொங்கலூர் பகுதியில் இரண்டு இடங்களில், இந்தாண்டு முதல் கொப்பரை கொள்முதல் மையம் அமைய இருப்பதால், இப்பகுதி விவசாயிகளின் பல ஆண்டு கனவு நனவாகிறது.பொங்கலூர் பகுதியில் இருந்து பெரும்பாலானோர், திருப்பூர் பனியன் கம்பெனிக்கு வேலைக்கு சென்று விடுவதால், விவசாய வேலைக்கு கடுமையான ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டது; ஆட்கள் பற்றாக்குறையை சமாளிக்க, பெரும்பாலான விவசாயிகள் தென்னை பயிர் செய்வதில் ஆர்வம் காட்டினர். தென்னை பயிரிட்ட விவசாயிகள், தேங்காய்க்கு உரிய விலை கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்தனர்.

சீசனில் விலை இறங்குவதும், உற்பத்தி குறையும் போது, விலை ஏறுவதுமாக இருந்தது. விலை வீழ்ச்சியை தடுத்து, விவசாயிகளை நஷ்டத்தில் இருந்து காப்பாற்று வதற்காக, சில ஆண்டுகளாக விவசாயிகளிடம் இருந்து கொப்பரையை அரசு நேரடியாக கொள்முதல் செய்து வருகிறது. பொங்கலூர் பகுதியில் கொப்பரை கொள்முதல் மையம் இல்லாததால், பல்லடம், செஞ்சேரியில் உள்ள மையங்களுக்கு விவசாயிகள் கொண்டு சென்று விற்பனை செய்தனர். கொப்பரையை கொண்டு செல்ல பெரும் பொருட்செலவு ஏற்பட்டதுடன், நேர விரயமும் ஏற்பட்டது.

இப்பகுதி விவசாயிகளின் சிரமத்தைப் போக்க, பொங்கலூர் பகுதியில் கொப்பரை கொள்முதல் மையம் அமைக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக விவசாயிகள் போராடி வந்தனர். தற்போது, விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, பொங்கலூர் குதியில் இரண்டு இடங்களில் கொப்பரை கொள்முதல் மையம் திறக்க அரசு திட்டமிட்டுள்ளது.பொங்கலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் ஒன்றும், வாவிபாளையம் ஊராட்சியில் உள்ள முத்தூரில் ஒன்றும் அமைய இருக்கிறது. இது, இப்பகுதி விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**நல்ல விலை கிடைக்காததால் வெங்காய விவசாயிகள் சோகம்**

உடுமலை : தளி மற்றும் சுற்றுப் பகுதியில் சின்ன வெங்காயம் அறுவடை பணிகள் தீவிரமாக நடக்கிறது. வெங்காயத்திற்கு நல்ல விலை கிடைக்காததால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். உடுமலை, தளி பகுதியில் விவசாயம் பிரதானத்தொழிலாக உள்ளது. இப்பகுதியில் காய்கறி பயிர்களும் அதிகளவு சாகுபடி செய்யப்படுகின்றன. இதில், கிணற்றுப்பாசனத்திற்கு ஆண்டு முழுவதும் சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது. 90 நாள் பயிரான வெங்காயம் தற்போது அறுவடை பணிகள் தீவிரமாக நடக்கின்றன. ஆனால், வெங்காயத்திற்கு நல்ல விலை கிடைக்காததால், இருப்பு வைத்து வருகின்றனர்.

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது: சின்ன வெங்காயம் சாகுபடிக்கு 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. 90 நாள் பயிரான சின்னவெங்காயம் தற்போது அறுவடை பணிகள் தீவிரமாக நடக்கின்றன. ஆனால்,

நல்ல விலை கிடைக்காததால் சின்ன வெங்காயத்தை சிலர் இருப்பு வைத்து வருகின்றனர். அதிக நாட்கள் சின்ன வெங்காயம் இருப்பு வைக்க முடியாத சூழ்நிலையால், சிலர் கிடைத்த விலைக்கு விற்று வருகின்றனர். தற்போது 10 முதல் 11 ரூபாய் வரை மட்டுமே விலை கிடைக்கிறது. நல்ல விலை கிடைக்காததால், நஷ்டம் ஏற்படும் சூழ்நிலை நிலவுகிறது. இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்

**விலையும் இல்லை லாபமும் இல்லை விவசாயிகள் சோகம்**

உடுமலை : உடுமலை அருகே உள்ள தளி மற்றும் சுற்றுப்பகுதி களில், மானாவாரிப்பயிரான எள்ளு சாகுபடி செய்யப்பட் டுள்ளது. தற்போது அறுவடை பணிகள் தீவிரமாக நடக்கின்றன.

விவசாயிகள் கூறியதாவது:தளி மற்றும் சுற்றுப்பகுதி களில், சாகுபடி செய்யப் பட்ட 90 நாள் பயிரான எள்ளு அறுவடை பணிகள் தீவிரமாக நடக்கின்றன. எள்ளு சாகுபடிக்கு ஏக் கருக்கு 7,000 ரூபாய் வரை செலவாகிறது. ஏக்கருக்கு 100 கிலோ மூட்டை, நான்கு மூட்டை வரை மகசூல் கிடைத்தது. போதிய மழை இல்லாததால், மகசூல் குறைந்துள்ளது. இரண்டு மூட்டை மட்டுமே ஏக்கருக்கு கிடைக்கிறது. எள்ளு விலையும் அதிகரிக் காமல், 3,750 ரூபாய் முதல் 4,000 ரூபாய் வரை விற் பனை செய்யப்படுகிறது. இதனால், போதிய லாபம் கிடைக்காத சூழ்நிலை நிலவுகிறது.இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.

---

தினத் தந்தி



குறவன்பாளையத்தில், தோட்டத்தில் பயிரிடப்பட்டு இருந்த வாழை மரங்கள் சூறாவளி காற்றினால் முறிந்து விழுந்து கிடக்கும் காட்சி.

***கோபி பகுதியில் சூறாவளி காற்றுடன் பலத்த மழை 20 ஆயிரம் வாழைகள் முறிந்து விழுந்தன***

கோபிசெட்டிபாளையம், மே.25–
கோபி பகுதியில் சூறாவளி காற்றுடன் பெய்த பலத்த மழையால் 20 ஆயிரம் வாழைகள் முறிந்து விழுந்தன. வீடுகள் சேதம் அடைந்தன.

பலத்த மழை

ஈரோடு மாவட்டம், கோபி பகுதியில் நேற்று முன்தினம் மாலை 5.15 மணி முதல் இரவு 8 மணி வரை பலத்த மழை பெய்தது. இதனால் மாவிலங்கம், வேலாமரம் ஆகிய மரங்கள் வேரோடு சாய்ந்து வாய்க்காலின் குறுக்கே சரமாரியாக விழுந்தன.

பங்களாப்புதூர் ஒண்டி முனியப்பசாமி கோவிலின் எதிரே 60 ஆண்டு பழமையான பெரிய அரச மரம் முறிந்து விழுந்தது. அதுபோல், அந்த பகுதியில் வளர்ந்து நின்ற கரும்பு, மக்காச்சோளம், சோள பயிர்கள் மழையில் மூழ்கி சாய்ந்தன. அந்த பகுதியில் பயிரிடப்பட்டு இருந்த வாழை மரங்களும் முறிந்து விழுந்தன.

20 ஆயிரம் வாழைகள் சேதம்

கோபி ஒன்றியத்துக்கு உட்பட்ட குறவன்பாளையத்தில் நேற்று முன்தினம் இரவு வீசிய பயங்கர சூறாவளி காற்றினால், விவசாயி தேவனகுமார் என்பவரது தோட்டத்தில் 6½ ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டு இருந்த 20 ஆயிரத்துக்கும் அதிகமான வாழை மரங்கள் முறிந்து விழுந்தன. இதன் சேத மதிப்பு ரூ.12 லட்சம் ஆகும்.

கடுக்காம்பாளையம் கிராமத்தில் 4 குடிசை வீடுகள் விழுந்து சேதம் அடைந்தன. சூறாவளி காற்றில் வீட்டின் மேற்கூரைகள், ஓடுகள், சிமெண்ட் அட்டைகள் ஆகியவை பறந்து சென்று சாலையில் விழுந்தன. மேலும், தென்னை மரங்கள், தேக்கு மரங்கள், வேப்ப மரங்கள் உள்பட பல்வேறு மரங்கள் வேரோடு சாய்ந்து சாலையில் விழுந்தன.

தொகுப்பு வீடுகள் சேதம்

பொம்மநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒத்தக்குதிரையில் உள்ள தனியார் நூற்பு ஆலைக்கு சொந்தமான சுற்றுச்சுவர் இடிந்து அருகில் உள்ள தொகுப்பு வீடுகளின் மீது விழுந்தன. இதில், 10 வீடுகள் சேதம் அடைந்தன. வீட்டின் அருகில் கட்டப்பட்டு இருந்த கன்று குட்டியும் படுகாயம் அடைந்தது.

அதைப்போல பொம்மநாயக்கன்பாளையம் அருகே உள்ள கொன்னமடை பகுதியைச் சேர்ந்த விவசாயி தட்சிணாமூர்த்தி என்பவருக்கு சொந்தமான தோட்டத்தில் பயிரிடப்பட்டு இருந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழை மரங்கள் காற்றில் முறிந்து விழுந்து சேதம் அடைந்தன. அவற்றின் மதிப்பு ரூ.8 லட்சம் ஆகும். பொம்மநாயக்கன்பாளையத்தை சேர்ந்த செல்லப்ப கவுண்டர், சுப்புரத்தினம், ராணி ஆகியோரது குடிசை வீடுகளும் சாய்ந்து சேதம் அடைந்தன.

மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கோபி தாசில்தார் பன்னீர்செல்வம், ஊராட்சி தலைவர் சண்முகத்தரசு ஆகியோர் பார்வையிட்டு பொதுமக்களுக்கு ஆறுதல் கூறினர்.

51.6 மில்லி மீட்டர் மழை

கோபி–ஈரோடு மெயின் ரோட்டில் தாசம்பாளையம் பகுதியில் மின்கம்பம் ஒன்று 2 துண்டுகளாக உடைந்து விழுந்தது. இதில், மின்சார கம்பிகள் அறுந்து சாலையின் நடுவில் விழுந்தது. உடனடியாக மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. வெள்ளியங்காட்டு புதூரில் சண்முகசுந்தரம் என்பவருக்கு சொந்தமான பட்டுக்கூடு மையம் இடிந்து விழுந்தது. இதில் பட்டு புழுக்கள் இறந்தன. சித்தோட்டில் இருந்து கோபி செல்லும் ரோட்டில் ஏராளமான மரங்கள் முறிந்து விழுந்தன. இவைகளை நெடுஞ்சாலைத்துறை பணியாளர்கள் உடனடியாக அப்புறப்படுத்தினார்கள். கோபி பகுதியில் நேற்று 51.6 மில்லி மீட்டர் மழை பெய்தது குறிப்பிடத்தக்கது.

## கூடலூர் வனப்பகுதியில் செழித்து வளரும்

# அரிய வகை 'பெரணி' செடிகள்

கூடலூர், மே.25-

கூடலூர் வனப்பகுதியில் அரிய வகை பெரணி செடிகள் செழித்து வளர்ந் துள்ளன. முறையாக வனப் பகுதிகளை பாது காத்தால் மட்டுமே அரிய வகை தாவரங்களை அழிவில் இருந்து காக்க முடியும் என இயற்கை ஆர்வலர்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

### வனப்பகுதிகள்

நீலகிரி மாவட்டம் இயற்கை எழில் சூழ்ந்த பகுதி. பெரும் பாலான வனங்களை கொண்ட நீலகிரியில், அரிய வகை தாவரங்கள், மூலிகைகள் உள்ளடக்கியது. காலப் போக்கில் வனப்பகுதிகள் சுருங்கி கொண்டே வருவதால் அரிய வகை மூலிகைகள், தாவரங்கள் அழிந்து வருகின்றன. கூடலூர் வனப்பகுதிகளில் பூச்சிகளை உண்ணும் தாவ ரங்கள் அதிகளவு இருந்தது.

ஆனால் தற்போது இந்த வகை தாவரங்கள் முற்றிலும் அழிந்து விட்டன. இதே போல் மனி தனின் உடல் ஆற்றலுக்கு தேவையான மூலி கைகள் அதிகளவு காணப்பட்டன. ஆனால் தேயிலை தோட்டங்களாக வனப்பகுதிகள் மாறியதால் மூலிகை செடிகள் விரல் விட்டு எண்ணும் அளவிலே தற்போது உள்ளது. இயற்கை பகுதிகளை பாதுகாத்தால் மட்டுமே மனித இனமும் பாதுகாக்கப்படும் என்ற சிந்தனை மனிதர்கள் மத்தியில் வந்தால் மட்டுமே இயற்கை பகுதிகள் காப்பாற்றப்படும்.

### செழித்து வளரும் பெரணி செடிகள்

கூடலூர் குண்டம்புழா மற்றும் ஓவேலி வனப்பகுதிகளில் அதிகளவு பெரணி செடிகள் செழித்து வளர்ந்துள்ளன. ஓவேலிக்கு செல்லும் சாலையோரம் அதிகளவு பெரணி செடிகளும், ஒட்டுண்ணி தாவரங்களும் உள்ளன. இந்தியாவில் சுமார் 3 ஆயிரம் பெரணி செடிகள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதில் கணிசமான அளவு பெரணி செடிகள் நீலகிரியில் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

பெரணி செடிகள் காற்று மற்றும் தண்ணீரில் பரவி வளரக்கூடிய தன்மை கொண்டவை. இயற்கையில் பெரணி செடிகளும் ஒரு அங்கம் வகித்து வருகிறது. அரிய வகை பெரணி செடிகள் கூடலூர் பகுதியில் அதிகளவு வளர்ந்துள்ளன. இனிவரும் காலங்களிலாவது இவ்வகை தாவரங் களை அழிவின்பிடியில் இருந்து பாதுகாக்க சம்பந்தப்பட்ட துறையினர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இயற்கை ஆர்வலர் கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து கூடலூர் ஜீன்பூல் தாவரவியல் மைய உதவி வனபாதுகாவலர் நெடுஞ்செழியன் கூறியதா வது:-

### இயற்கைக்கு மிக அவசியம்

இந்தியாவில் 3 ஆயிரம் பெரணி செடிகள் உள்ளது. இந்த வகை செடிகள் குளிர் பிரதேசங் களில் அதிகளவு வளரக்கூடியது. பரிணாம வளர்ச்சியில் உருவாகக்கூடியது பெரணி செடிகள். இவ்வகை செடிகள் இயற்கைக்கு மிக அவசியம். ஜீன்பூல் மையத்தில் 75 வகை பெரணி செடிகள் வைக்கப்பட்டு பாது காக்கப்பட்டு வருகின்றன.

கூடலூர் வனப்பகுதியில் இன்னும் அதிகளவு பெரணி செடிகள் உள்ளன. அவற்றை கண்டறிந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தார்.



கூடலூர் குண்டம்புழா வனப்பகுதியில் செழித்து வளர்ந்துள்ள அரிய வகை பெரணி செடிகளை படத்தில் காணலாம்.